பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 16 வியாழக்கிழமை 01.09.2022 கதிர் 298

**இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வீட்டுப் பிரச்சினை கொடி கட்டிப் பறக்கின்றது.

திண்ணை எப்போது காலியாகும் என்று பார்த்திருக்கும் தரப்புக்கள்போட்டியைத்தொடங்கி விட்டன .கூட்டமைப்புத் தலைமைப் பதவிக்கு. ☞ 2

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இலங்கையைப் பாரப்படுத்தும் பிரேரணை

## வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் ஐ.நா. மனித உரிமை சபை உறுப்பு நாடுகளுக்கு மகஜர்

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டூழியக் குற்றங்களுக்காக நீண்டகாலமாகத் தமிழ் மக்கள் கோரி நிற்கும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்துவதற்குப் பாதுகாப்புச் சபையைத் தூண்டுவதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய ஆறு அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், சமூக அமைப்புகள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் பிரதான நாடுகளுக்கு வரைபு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

☞ 2

## தமிழீழ விடுதலைப்புலிகளால் நிலத்தில் புதைக்கப்பட்ட எரிபொருள் தாங்கி மீட்பு!



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் தமிழீழ விடுதலைப்புலிகளால் நிலத்தில் புதைக்கப்பட்ட பாரிய எரிபொருள் தாங்கி ஒன்று நேற்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீட்கப்பட்டுள்ளது.

காணியில் நிலத்தில் எரிபொருள் நிரப்பிய தாங்கி இருக்கின்றது எனப் ☞ 2

## 2 ராஜபக்ஷக்களின் ஆட்சிகளே நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம்

### சந்திரிகா குற்றச்சாட்டு



இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது, இரண்டு ராஜபக்ஷக்களின் ஆட்சிகளின்போது மேற்கொள்ளப்பட்ட ஊழல்களின் விளைவாகும்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ☞ 4

## அம்பலாங்கொடையில் ஒருவர் சுட்டுக் கொலை



அம்பலாங்கொடை பிரதே சத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு நாணய நிதியத்தின் அவசர கடன் கிடைக்கும் சாத்தியம்



இலங்கைக்கு அவசர கடன் உதவி வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் அடிப்படை நிர்வாக மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளது என ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 3 பில்லியன் டொலர் கடனைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று ரொய்ட்டர்ஸ் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு இன்று வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மரண தண்டனையை நிறைவேற்ற எனது கையொப்பத்தைப் பயன்படுத்தமாட்டேன்

### உயர் நீதிமன்றத்துக்கு ஜனாதிபதி அறிவிப்பு



மரண தண்டனையை நிறைவேற்றத் தான் கையொப்பமிடப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சட்டமா அதிபர் ஊடாக உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு குற்றவாளிகளுக்கு 2019 இல் மரண தண்டனையை

## நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் துப்பாக்கிச்சூடு; இருவர் படுகாயம்!

கொழும்பு, செப். 01

நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் துப்பாக்கி பிரயோகம் நேற்று முற்பகல் நடத்தப்பட்டுள்ளது எனவும், காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மாணவர் ஆர்ப்பாட்டம்: பொலிஸ் கைதுசெய்த 28 பேருக்கும் பிணை!

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின்போது கைது செய்யப்பட்ட 28 பேரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மாளிகாகந்தை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டபோது சந்தேகநபர்களுக்குப் பிணை ☞ 2

## தென்கிழக்குப் பல்கலை மாணவி நிந்தவூர் விபத்தில் பரிதாபச் சாவு

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது வாகனம் ஒன்றுடன் மோதுண்டு பலியாகியுள்ளார்.

நிந்தவூர் பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காத்தான்குடி - 5, மீராப்பள்ளி வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய அக்பர் அலி பாத்திமா அஸ்பா என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவியான இவர் இரண்டாவது பருவகால அமர்வின் பொருட்டு தனது கணவருடன் காத்தான்குடியிலிருந்து நேற்றுக் காலை 6 மணியளவில் புறப்பட்டு நிந்தவூரினூடாக பல்கலைக்கழகத்துக்குப் பயணித்துக்கொண்டிருந்தபோதே வாகனம் ஒன்றுடன் மோதுண்டு சாவடைந்துள்ளார்.

இவரது ஜனாஸா நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு காலமும் இந்தத் தலைமை பதவியைத் தக்க வைத்திருந்துக்கும் சம்பந்தன் அது குறித்து சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் என்ன கூறினார் என்பது இப்போது அவதானிக்கப்படக் கூடியது.

தீர்க்கதரிசன எதிர்பார்ப்போடு கூட்டமைப்புத் தலைமை யாருக்குரியது என்பதை 2012 இல் வெளிப்படையாகவும், பட்டவர்த்தனமாகவும் கூறி இருக்கின்றார் சம்பந்தன்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு 2012 மே 27ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் நடந்த போது, அக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று சம்பந்தன் ஆற்றிய தலைமைப் பேருரையின் சில பகுதிகளை இப்போது நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சம்பந்தன் அப்படி பேசிய அந்தத் தேசிய மாநாட்டில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் விருந்தினர்களாக - பார்வையாளர்களாக - பங்கு கொண்டனர் என்ற நினைவு எனக்கு உண்டு. அப்போது புளொட் கூட்டமைப்பிற்குள் வரவில்லை. தமிழரசுடன் ரெலோவும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் தான்.

அச்சிட்ட சம்பந்தனின் தலைமைப் பேருரை பரவலாக விநியோகிக்கப்பட்டது. அப்போது வாய் மூடி இருந்த பலர் இப்போது தலைமைக்கு உரிமை கோருகின்றனர்.

அது தப்பு என்று நான் கூற வரவில்லை. அன்றைக்குப் பொருத்தம் இல்லாதது, இன்றைக்குப் பொருத்தமாக இருக்கலாம் அல்லவா?

சரி. சம்பந்தனின் உரையின் பகுதிகளை இனிப் பார்ப்போம்:-

*“எவ்விதமாக ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு வரலாறு ஓர் அரசியல் பிறப்பைத் தந்ததோ, அதே விதமாகவே, பத்தாண்டுகளுக்கு முன்னர், எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் இருந்த அன்றைய காலச் சூழலுக்கு இசைவாக, வரலாறு எமது கட்சிக்கு ஒரு புதிய அரசியற் பாத்திரத்தையும் தந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின் கீழ் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் தலைமையேற்று வழி நடத்தும் பாத்திரமே அது. அந்தத் தலைமைப் பாத்திரம் என்பது கூட, எமது கட்சியின் வரலாறு, பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றின் அடிப்படையிலிருந்து தான் வந்தது. அந்தப் புதிய கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே இன்றுவரை விளங்கி வருகின்றது. அவ்வாறே அது என்றும் விளங்கி வரும்.....”*

*“....... நாம் கூடியிருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு மன்றத்திலாக இருந்தாலும், எமது கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இருப்பதாலும், என்றும் அது அவ்வாறே இருக்கப் போகின்றது என்பதாலும், எமது கட்சியினதும் கூட்டமைப்பினதும் தலைமைப் பொறுப்பில் தற்போது நானே இருப்பவன் என்ற அடிப்டையிலும் - மேலும் சில விடயங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன்.*

*“ஒரு ஜனநாயக அரசியற் கட்டமைப்பிற்குள் கருத்துவேறுபாடுகள் எழுவது இயல்பானது. கருத்து வேறுபாடுகள் எழத்தான் வேண்டும் ஜனநாயகத்தின் அடிப்படையும் அதுதான். ஆனால், அமைப்பிற்குள்ளான கருத்துவேறுபாடுகள், அமைப்பிற்கு உள்ளேயே கலந்தாலோசிக்கப்பட்டுக் களையப்படவேண்டியவையே அல்லாமல், கட்சிக்கு வெளியே பகிரங்கப் பொது மன்றங்களில் கட்டவிழ்த்துவிடப்படக்கூடியவை அல்ல. அது ஒரு நலமான அணுகுமுறையாகவும் அமையாது. அவ்வாறான அணுகுமுறைகள், கருத்திணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஏற்கெனவே இருக்கும் முரண்பாடுகளைத்தான் மேலும் முற்ற வைக்கும். அது மேலதிக பிளவுகளுக்கு வழிவகுப்பதுடன், எமது அரசியற் கட்சியைப் பாதிப்பது மட்டுமன்றி, ஒட்டுமொத்தமான எமது இனத்தையுமே பலவீனப்படுத்திவிடும். இதனை, மக்களின் பிரதிநிதிகளான நாங்கள் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.*

*“அதனாலேயே - உள் முரண்பாடுகள் எதனையும் பகிரங்கத்தில் விவாதிக்கும் புதிய பண்பாடு எதனையும் எமது கட்சி ஊக்குவிக்காது என்பதனையும், அதனை நாம் அனுமதிக்கக் கூடாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உறுதிப்படத் தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன். ஒரு ஜனநாயகக் கட்சியின் சிறப்பியல்பு என்பது, அனைத்துவிதமான கருத்துக்களுக்கும் அது வாசல்களைத் திறந்துள்ளது என்பது தான். எமது கட்சியும் அந்தச் சிறப்புத் தன்மையை உடையது. கட்சியை மேன்மைப் படுத்தி, மக்களுக்குப் பயனுறச் செய்ய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடனேயே நாம் இருப்பதால், அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் வழிகாட்டக்கூடிய உருப்படியான கருத்துக்களை நாம் வரவேற்கிறோம். முன்வைக்கப்படும் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆராய்ந்து, தேர்ந்தெடுத்து, உள்வாங்கி, செயற்படுத்தி, அடுத்த கட்டம் நோக்கி நகரும் விருப்புறுதியோடு நாம் உள்ளோம் என்பதையும் நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”*

- என்றுரைத்திருக்கிறார் சம்பந்தன்.

எல்லாவற்றையும் எதிர்பார்த்துத்தான் சம்பந்தன் நேரத்துடன் பேசி இருக்கின்றார் போலும். தீர்க்கதரிசிதான்..!

**- மின்னல் -**

## சர்வதேச குற்றவியல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் முன்னெடுப்பில் இவ்விடயம் சாத்தியமாகியுள்ளது என்று ரெலோ கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தக் கோரிக்கையில் பிரதானமாக சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையைத் தூண்டுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட வந்த பிரேரணைகளை இலங்கை நடைமுறைப் படுத்தத் தவறி உள்ளமையால், மேலும் கால அவகாசங்கள் வழங்குவது அர்த்தமற்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் சீனா தன்னுடைய வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்துவதைத் தடுக்கும் என்ற வாதம் குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் முயற்சியா என்று உலகின் பல தரப்பினரும் சந்தேகத்தை எழுப்புகின்றனர் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கள் ஆதாரமற்றவை என்றும், இலங்கையை விட சீனாவோடு மிக நெருக்கமாக இருந்த சூடான் நாட்டை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஊடாக மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியபோது அதற்கு எதிராக எந்த நாடும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்பதும், அதே போன்று வடகொரிய நாட்டை சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டூழியக் குற்றங்களுக்காக நீண்டகாலமாகத் தமிழ் மக்கள் கோரி நிற்கும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை மேற்குறிப்பிட்ட உண்மைகளின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்துவதற்குப் பாதுகாப்புச் சபையைத் தூண்டுவதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

## தமிழீழ விடுதலைப்புலி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜாவின் நீதிமன்ற அனுமதியுடன் தோண்டும் நடவடிக்கை நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் குறித்த பகுதி கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது பாரிய இருப்பு எரிபொருள் தாங்கி ஒன்று எரிபொருள்கள் இல்லாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

16.3 அடிநீளமும், 7.9அடி விட்டமும் கொண்ட எரிபொருள் தாங்கியே மீட்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மீட்கப்பட்ட எரிபொருள் தாங்கியைப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கொண்டு சென்று பாதுகாக்குமாறும், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதிவான் பணித்துள்ளார்.

## தென்கிழக்குப் பல்கலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலை நிர்வாகம் பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவித்ததைத் தொடர்ந்து சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.

இம்மாணவி திருமணமாகி மூன்று மாதங்களே ஆன நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## பொலிஸ் கைதுசெய்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

மருதானையில் நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

## மரண தண்டனையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்தை வலுவற்றதாகக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாட்டை நீதிமன்றில் அறிவித்தார்.

விஜித் மல்லல்கொட, எல்.ரீ.பி. தெஹிதெனிய மற்றும் முருது பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வினவிய போது, மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தனது கையொப்பத்தை, இனிமேல் பயன்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது, இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, மரண தண்டனையை அமுல்படுத்துவதில்லை என்று அரசு கொள்கை ரீதியிலான தீர்மானத்தை எடுத்துள்ளது என்று நீதிமன்றில் தெரிவித்தார். இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையைத் தொடர வேண்டிய அவசியம் உள்ளதா என்பது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு நீதியரசர் குழாமின் தலைமை நீதியரசர் விஜித் மலல்கொட மனுதாரரின் சட்டத்தரணிகளுக்கு அறிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த நீதியரசர் குழாம், இந்த மனுக்களை அடுத்த ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி ஆராயத் தீர்மானித்தது.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு கைதிகளின் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்குத் தாம் கையொப்பமிடத் தீர்மானித்துள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஜூன் 26 அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கக் கோரி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கைதிகளைப் பாதுகாக்கும் அமைப்பு உள்ளிட்ட பல தரப்பினர் இந்த அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதியின் முடிவு அரச கொள்கைக்கு எதிரானது என்றும் மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இது சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு எதிரானது, நியாயமற்றது என்றும் மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு இந்த மனுக்கள் ஊடாக நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தது.







# தாமரைக் கோபுர செயற்பாடுகள் செப்டெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பம்



இலங்கை மக்களுக்கு புத்தம் புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமான 'தாமரை கோபுரத்தின்' செயல்பாடுகளை செப்ரெம்பர் 15 முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு கோடியே 13 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பல புதிய அனுபவங்களை வழங்க கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த தாமரைக் கோபுரத் திட்டத்துக்கு சீன நிறுவனம் 88.65 அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்கியுள்ள நிலையில், மீதித் தொகையை இலங்கை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக சீனாவிடம் பெறப்பட்ட கடன் தவணை 2024 ஆம் ஆண்டிற்குள் செலுத்தி முடிக்கப்பட உள்ளது. அத்துடன் ஏற்கனவே கடனாகப் பெறப்பட்ட சுமார் 66 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இவ்வருடம் மார்ச் மாதம் திறைசேரியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அதன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படுகிறது.

தாமரை கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி சீன நிறுவனம் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்து மீண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைத்தது.

உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் இருப்பதைப் போன்ற பொழுதுபோக்கு மற்றும் புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்க திட்டமிட்டிருப்பதாக கொழும்பு லோட்டஸ் டவர் தனியார் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு சாகச விளையாட்டுகளான ஸ்கை டைவிற்றும் பங்கி ஜம்பிங் ஆகியவையும் இதில் அடங்கும்.

இதுவரை 80 சதவீதமான உள்நாட்டு முதலீட்டாளர்களும் 20 சதவீதமான வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தாமரை கோபுரத்தில் முதலீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டயலொக் டெலிகொம் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் என்பன தலா 20 கோடி ரூபா முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன.

தாமரைக்கோபுரத்தின் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நுழைவுச் சீட்டைக் கொள்வனவு செய்து, அனைவரும் இதனைப் பார்வையிடவும் புதிய அனுபவங்களை பெறவும் முடியும்.

நுழைவுச் சீட்டொன்றின் விலை 500 ரூபா என்பதோடு விசேட நுழைவுச் சீட்டின் விலை 2,000 ரூபாவாகும். பார்வையிடவரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர்களாகும்.

அடுத்த சில மாதங்களில் நுழைவுச் சீட்டுக்கு பதிலாக கியு. ஆர். தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

10.5 ஏக்கர் நிலப்பரப்பில் தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு இதுவரை 58 முதலீட்டாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

அதில் 22 பேர் ஒப்பந்தம் மேற்கொள்ள இணங்கியுள்ளனர். 15 பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுக்காக எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை முன்பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் தாமரைக்கோபுர செயற்பாடுகளை மேலும் வெற்றிகரமாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தாமரை கோபுரத்திற்கு வரும் பொதுமக்களுக்காக தரை தளம், பிரபலமான உணவகங்கள், பப் மற்றும் நினைவுப் பரிசு அங்காடிகள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பல முன்னணி வணிக வங்கிக் கிளைகளும் தரை தளத்தில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் தளம், அலுவலக வசதிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் டிஜிற்றல் சினிமா அனுபவத்தைப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்திலுள்ள மாநாட்டு மண்டபம், ஒரே நேரத்தில் சுமார் 400 பேருக்கான இருக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், திறந்த தளம் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய தொழில்நுட்பத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள இலங்கையில் உள்ள மிகவேகமாக இயங்கக் கூடிய மூன்று மின் தூக்கிகள் தாமரைக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த அனைத்து அனுபவங்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பொதுமக்கள் பார்த்தும் அனுபவித்தும் மகிழ முடியும் என்று கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

## சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டுவந்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை!

மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகங்களை பொது சுகாதார அதிகாரிகள் திடீர் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன் போது இரண்டு பிரிவுகளாக பொது சுகாதார அதிகாரிகள் உணவங்களை முற்றுகையிட்டனர் .

இதன் போது பாவனைக்கு உதவாத அரசி மூடைகளை கைப்பற்றியுள்ளதுடன் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டுவந்த பல கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உதயகுமார் தெரிவித்தார்.

சுகாதாரமற்ற முறையில் பல உணவங்கள் செயற்பட்டுவந்ததைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யும் நடவடிக்கையும் இதன் போது எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் அதேவேளை சுகாதாரம் பேனப்படாது மனித பாவணைக்கு உதவாத உணவுகளை விற்பனை உணவகங்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உதயகுமார் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# வேதம் ஓதும் சந்திரிகா

**'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்' என்பார்கள்.**

**அந்த மாதிரி இருக்கின்றது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது கூறும் கருத்து.**

**இலங்கையின் நிதிப் பேரழிவு – பொருளாதாரப் பின்னடைவு – இரண்டு ராஜபக்ஷக்களின் ஆட்சிகளின் ஊழலின் விளைவு என்று அவர் கூறுவதைப் பார்க்கும் போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.**

**ராஜபக்ஷக்களின் காலத்தில் ஊழல் உச்சத்திற்கு போனது என்பது உண்மைதான். அதை மறுப்பதற்கில்லை.**

**ஆனாலும் இலங்கையின் இன்றைய நிலைமையை நோக்கி நாடு சென்றமையை ஒட்டி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறைக்க முயலும் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.**

**முதலாவது – ஏதோ ராஜபக்ஷக்களின் ஆட்சியில் மட்டும்தான் ஊழல் உச்சம் பெற்றது, அதற்கு முன்னரும், இடையிலும் தூய, ஊழலற்ற, நேர்மையான ஆட்சி முறைமையே இங்கு நிலவி வந்தது என்பது போன்று ஒரு மாயையை ஏற்படுத்த விழைகின்றார் சந்திரிக்கா என்றே தோன்றுகின்றது. ஊழல் சாம் ராஜ்யம் ராஜபக்ஷ மகுடத்தின் கீழ் கொடி கட்டிப் பறந்தது என்றாலும், அதற்கு முன்னரும், இடையிலும் இருந்த அரசுகளும் – ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசும் கூட – ஏதோ நேர்மையானவை அல்ல. அவையும், அவற்றில் அதிகாரத்தில் இருந்தவர்களும், தத்தமது பங்குக்கு நாட்டைச் சூறையாடாமல் இருக்கவில்லை. என்ன, ராஜபக்ஷக்களின் காலத்தில் அது கண்மண் தெரியாமல் இரட்டை வேகம் கட்டிப் பறந்தது. அவ்வளவுதான்.**

**அடுத்தது – ஏதோ ஆட்சியாளர்களின் ஊழலினால் மட்டும்தான் இந்த நிதிப் பேரழிவு, பொருளாதார பின்னடைவு வந்தது, இல்லையேல் அது வந்திருக்காது என்ற சாரப்பட சந்திரிகா நம் காதில் பூச்சுற்றப் பார்க்கிறார்.**

**உண்மை அதுவல்ல. அமைதியான, நல்லிணக்கம் உள்ள, இன சௌஜன்யம் நிறைந்த நாட்டைக் கட்டி எழுப்பத் தவறி, இந்த நாட்டை நிரந்தர இனப் பிணக் குக்குள்ளும், பூசலுக்குள்ளும் தள்ளி, இரத்த ஆறு ஓடும் கொடூர யுத்தத்தைக் கொண்டும் வந்தமை தான் இன்றைய இந்தப் பின்னடைவுக்குப் பிரதான காரணம்.**

**பெரும்பான்மை இனத்தவர்களின் பௌத்த, சிங்களப் பேரினவாத இன வெறியே இந்த நாடு அமைதிப் பூங்காவாக விளங்கும் வாய்ப்புக்கு நிரந்தர ஆப்படித்தது. தீராப் பகையை இந்த நாட்டில் விதைத்தது அந்த பேரினவாத வெறிதான்.**

**தாம் ஆட்சி அதிகாரத்தைக் குறுக்கு வழியில் கைப்பற்றுவதற்கும், அதைத் தொடர்ந்து கையில் வைத்திருப்பதற்குமாக, பேரின வெறியைத் தூண்டி, அதனால் நாட்டிற்குப் பெரும் குழப்பத்தையும், களேபரத்தையும், இனங்களுக்கிடையில்தீராப் பகையுணர்வையும் ஏற்படுத்தியவர்களில் ராஜபக்ஷக்களை விட, முதன்மையானவர்கள் சந்திரிகாவின் பரம்பரையினரான பண்டார நாயக்காக்கள்தான்.**

**சந்திரிகாவும், அவரது தந்தையாரும், தாயாரும் விதைத்த வினையையும் சேர்த்துத்தான் நாடு இன்று அறுத்துக் கொண்டிருக்கிறது. தனித்து ராஜபக்ஷக்களின் பாவங்களை மட்டுமல்ல.**

**பண்டாரநாயக்கா குடும்பங்களின் சந்ததியான சந்திரிகா அம்மையார் இதனை மறக்காமல் இருப்பது நல்லது.**

# விவசாயம் செய்யப்படாத காணிகளின் அனுமதிப்பத்திரம் இரத்தாகும் என்ற சுற்றறிக்கை இரத்துச்செய்ய வேண்டும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் விவாசாயம்செய்யப்படாதவிடத்து அதற்கான அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படுமென வடமாகாண காணி ஆணையாளர் விடுத்துள்ள சுற்றறிக்கை உடனடியாக இரத்து செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 31 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான முதலாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வற் வரிகள் அதிகரிக்கப்பட்ட அடுத்து வரும் 4 மாதங்களுக்கான அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத்திட்டம், பொருளாதார நெருக்கடிகளுக்கும் சிக்கித்தவிக்கும் மக்களுக்கு எப்படி நிவாரணத்தை வழங்கப் போகின்றது?

5 ஏக்கருக்குட்பட்ட விவசாய நடவடிக்கைகளுக்கு பெறப்பட்ட வங்கிக்கடன்கள் தள்ளுபடி செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறான விவசாயக்கடன் தள்ளுபடி அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டபோதும் அவை மக்களை சரியாகச் சென்றடையவில்லை.

ஒரு சிலருக்கு மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. எனவே கமநல திணைக்களம் இது தொடர்பில் முறையான திட்டமிடல்களை முன்னெடுத்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேசிய வருமான வரித் திணைக்களத்தில் பதிய வேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது. இதற்கு முதலில் 18 வயது இளைஞன்,யுவதி வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் ஆட்சியாளர்கள் நாட்டை வைத்திருக்க வேண்டும்.

தமது எதிர்காலம் என்னவென தெரியாத நிலையில் இளைஞர், யுவதிகள் உள்ள நிலையில் வருமான வரி திணைக்களத்தில் அவர்கள் பதிவு செய்ய வேண்டுமெனக்கூறுகின்றமை அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோன்று அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்த அமெரிக்காவிலுள்ள நடைமுறை இங்கும் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஒரு போதும் நடக்காது. அரசியலும் அரச நிறுவனங்களில் நடக்கும் ஊழல் மோசடிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை.

தற்போது கூட அரச நிறுவனங்களுக்கு இறக்குமதிசெய்யப்படும்பொருள்களுக்கான தரகுப்பணம் அரசியல்வாதிகளுக்கு சென்று கொண்டிருக்கின்றது.

எனவே இதனை ஆட்சியாளர்களால் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது. இன்றும் அரச நிறுவனங்கள் ஊடாக ராஜபக்ஷ குடும்பத்துக்கு வருமானங்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த அரச நிறுவனங்களில் நடக்கின்ற மோசடிகளைத் தடுப்பதென்பது தற்போதுள்ள அரசுக்கு எட்டாக்கனியாகவே இருக்கும்.

மேலும் மண்ணெண்ணெய் இல்லாது பாதிக்கப்பட்டுள்ள பெருந்தொட்டத்தொழிலாளர்கள், மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமெனக்கூறப்பட்டுள்ளது. முதலில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டபோது அது படகுகளின் உரிமையாளர்களையே சென்றடைந்தது. ஆகவே, வழங்கப்படும் நிவாரணம் மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்ற சகல மீனவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

வடமாகாண சபையினுடைய மாகாண காணி ஆணையாளர் தற்போது 25-7-22 அன்று வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் விவசாயம் செய்யப்படாதவிடத்து அதற்கான அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படுமென அறிவித்துள்ளார். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக மக்களுக்கு போதியளவு உரம் இல்லை. எரிபொருள் இல்லை.மக்கள் தங்கள் காணிகளுக்கு சென்றுவரக்கூடிய சூழ்நிலை இல்லை. விதைகள், கிருமி நாசினிகள் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் அந்த மக்கள் ஏன் அந்தக்காணிகளில் விவசாயம் செய்யவில்லையென ஜனாதிபதி ஆராய வேண்டுமே தவிர விவசாயம் செய்யாத காணிகளை மீளப்பறிக்கவேண்டுமென்ற கொள்கை முற்றிலும் மக்களுக்கு விரோதமானது.

வடமாகாண காணி ஆணையாளர் சோதிநாதன் அந்த மக்கள் ஓர் ஏக்கர், இரு ஏக்கர் காணிகளை பெற்றுக்கொள்ள எவ்வளவு காலம் அலைந்திருப்பார்கள் கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே விவசாயம் செய்யாத காணிகளை ஏன் அதில் விவசாயம் செய்யவில்லை என்பதை அறிந்து அவர்கள் விவசாயம் செய்வதற்குரிய வழிவகைகளை அரசு செய்யவேண்டுமே தவிர அவர்களின் காணிகளை பறிக்கக்கூடாது. எனவே அவர்களின் காணிகளை பறிக்கும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றேன். – என்றார்.

## 2 ராஜபக்ஷக்களின் ஆட்சிகளே

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரே வழி சமூக – அரசியல்புரட்சியாகும் என்று அவர் 'தஹிந்து'வுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை திவாலானமைக்கு ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அவர்களது கூட்டாளிகளின் ஊழல்களே காரணமாகும்.

இந்தநிலையில், நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்களின் கட்சியை நம்பியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு செயற்படுகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இலங்கையில் கடந்த மாதங்களில் இடம்பெற்ற போராட்டங்கள், உண்மையிலேயே உற்சாகமாக இருந்தன. போராட்டக்காரர்களின் கோரிக்கையின் படி, புதிய முகங்கள் மற்றும் சரியான தொலைநோக்கு பார்வை கொண்டபுதிய அரசு ஆட்சிக்கு வரவேண்டும்.

போராட்டக்காரர்கள் என்னைச் சந்தித்த போது, அனைத்து அரசியல் கட்சிகளிலிருந்தும் சில நல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை அமைப்பதற்கு ஒரு இடைக்கால ஏற்பாட்டை நான் பரிந்துரைத்திருந்தேன்.

அதில் குடியியல் சமூக அமைப்புகள், தனியார் துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மரியாதைக்குரிய தனிநபர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் அரச சபை உருவாக்கப்படும்.

அது அரசின் பணிகளை மறு ஆய்வு செய்ய வேண்டும். இந்த அமைப்பின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 40 வீதம் இளைஞர்களிடம் இருந்தும், 40 வீதம் பெண்களிடம் இருந்தும் வர வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து மூளைசாலிகள் வெளியேறுகின்றனர். இந்த ஆண்டு சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இது மிகவும் துயரமானது.

பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரையில், அனைத்து இறக்குமதிகளையும் நிறுத்திவிட்டு இலங்கையில் அனைத்தையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கூறுவது யதார்த்தமானதல்ல.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன பொருளாதாரத்தை கண்மூடித்தனமாகத் திறந்துவிட்டார்.

இதன் காரணமாக இலங்கையின் சமூகக்கட்டமைப்புகள் அனைத்தும் உடைந்தன. அனைத்து வகையான அயோக்கியர்களும் நாடாளுமன்றத்துக்குள் வந்தனர்.

போராட்டக்காரர்களால் ராஜபக்சர்களை அமைதியான முறையில் துரத்த முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன். இல்லையெனில் அவர்கள் ஒருபோதும் சென்றிருக்க மாட்டார்கள்.

எனினும், அவர்கள் வெட்கமில்லாமல் இன்னும் ஒட்டிக்கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது – என்றார்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall

Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# உள்நாட்டுத் தயாரிப்பு ஏவுகணைகளை இந்திய ராணுவம் வெற்றிகர சோதனை






உள்நாட்டிலேயே விருத்தி செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட ராக்கெட்டுகளை (ஏவுகணைகளை) இந்திய இராணுவம் வெற்றிகரமாக பயனர் சோதனைகளை நடத்தியுள்ளது. இது, தனியார் துறைக்கு ஒரு மைல்கல்லாகும்.

இதனால் ரஷ்யாவிலிருந்து ராக்கெட்டுகளின் இறக்குமதியைப் படிப்படியாகக் குறைக்கலாம். மற்றும் நட்பு நாடுகளுக்கும் அவற்றை ஏற்றுமதி செய்யலாம்.



நாக்பூரை தளமாகக் கொண்ட எகனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட் (ஈ.ஈ.எல்.) தயாரித்த வெடிமருந்துகளுடன், பல்சோர் மற்றும் பொக்ரானில் கடந்த சில வாரங்களாக மேம்படுத்தப்பட்ட பினாகா ராக்கெட்டுகள் சோதனை செய்யப்பட்டன. அரசுக்கு சொந்தமான மியூனின்ஸ் இந்தியா லிமிடெட் (எம்.ஐ.எல்.) தயாரித்த ராக்கெட்டுகளும் சோதனையில் தேர்ச்சி பெற்றன என வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உள்நாட்டு ராக்கெட்டுகளை வாங்கும் முடிவை நோக்கி இந்திய இராணுவம் இப்போது முன்னேற வாய்ப்புள்ளது. ஓடர்கள் இப்போது எகனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் மியூனின்ஸ் இந்தியா லிமிடெட்டாகிய நிறுவனங்கள் இடையே பங்கிடப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட பினாக்காக்கள் (பினாகா என்பது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பல் குழல் ஏவுகணைகளை ஏவும் கருவி ஆகும். இந்திய இராணுவத்திற்கான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் இது உருவாக்கப்பட்டது.) 45 கிலோ மீற்றருக்கும் மேலான தூரத்தில் இருந்து, 37 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் மரபு ரக ராக்கெட்டுகள் வரை.

அனைத்துத் தொழில்நுட்ப தேவைகளையும் சரிபார்க்க இராணுவத்தால் 120க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் சோதனை செய்யப்பட்டன என வட்டாரங்கள் தெரிவித்தன.

மேம்படுத்தப்பட்ட இந்தத் தொழில்நுட்பம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ.) மூலம் சம்பந்தப்பட்ட தொழில்துறையுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய உற்பத்திகள் அரசு சாரா நிறுவனங்களுக்கு திறக்கப்பட்ட பின்னர். தனியார் துறையால் தயாரிக்கப்பட்ட ராக்கெட்டுகள் சேவைக்கு ஏற்றுக்கொள்ளப்படு வது இதுவே முதல் முறை. இந்த ரகங்களில் ஆண்டுதோறும் 1,000 யூனிட்டுகளுக்கு மேல் ராக்கெட்டுகள் என்ற அளவில் இராணுவத்திற்கு ஒரு பெரிய தேவை உள்ளது.

“ஆத்மநிர்பர் பாரத் (தன்னிறைவு) பார்வை என்று அவதானிக்கும் போது தனியார் துறையாலும் சாதித்துக் காட்ட முடியும் என்பதை இந்தத் திட்டம் சுட்டுகிறது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் இராணுவத்தின் நேரடி ஈடுபாட்டால் இது சாத்தியமானது என்று எகனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட்டின் தலைவர் சத்ய நாராயண் நுவால் ‘த எக்கனமிக்ஸ் ரைம்ஸ்’ இடம் கூறினார்.

கடந்த காலங்களில், இத்தகைய ரக வெடிப் பொருள் ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டன அல்லது பொதுத்துறையால் தயாரிக்கப்பட்டன. பல சமயங்களில் அவை ஆயுதப்படைகளின் வருடாந்திர தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை.

அரசுக்கு சொந்தமான பிரிவுகளில் இவற்றின் தரம் தொடர்பான பெறுபேறுகள் கலப்பு சாதனைகளாக (ஏற்ற,இறக்கங்களாக) இது வரை இருந்தமையால் அவற்றில் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக வெடிப் பொருள் ஆயுதங்களுக்கான மாற்று ஆதாரங்கள் உருவாக்குவதை ஆயுதப்படைகள் பார்த்து வரு கின்றன என்று அறிக்கைகள் தெரிவித்தன.

பல்வேறு வகையான தனியாரால் தயாரிக்கப்படும் இத்தகைய ரக வெடிப் பொருள் ஆயுதங்கள் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் வழங்கப்படும் நிலையான விலையை விடக் கணிசமாக மலிவானவை என்று தொழில்துறை மதிப்பிடுகிறது.

**(மூலம்: ‘த எக்கனமிக்ஸ் ரைம்ஸ்’)**

# மிகையீல் கோர்பச்சேவ் மறைந்தார்


1987 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனுடன், இடைதூர அணு ஆயுத ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் கோர்பச்சேவ்.

சோவியத் ஒன்றியத்தில் நிலவிய கட்டுப்பாடுகளைத் தளர்த்தியவர், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்குமான பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்தவர், கம்யூனிஸ்ட் நாடுகளின் தொகுப்பை முன்னின்று நடத்திய சோவியத் ஒன்றியத்தின் கடைசி தலைவர் என்று வரலாற்றில் பல அடையாளங்கள் கொண்ட மிகையீல் கோர்பச்சேவ் தனது 91வது வயதில் நேற்றுக் காலமானார்.

1985 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் தலைமைப் பதவிக்கு வந்த இவர் நாட்டின் இரும்புத் திரை கட்டுப்பாடுகளை நீக்கி நாட்டை உலகுக்குத் திறந்து விட்டார். உள்நாட்டிலும் பல சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தார். ஆனால், கடைசியில் சோவியத் ஒன்றியம் சிதைவதை இவரால் தடுக்க முடியவில்லை. ரஷ்யா, யுக்ரேன் உள்ளிட்ட பல நாடுகள் சோவியத் ஒன்றியத்தின் சிதைவை அடுத்த தனித்தனி நாடுகளாக உருவாயின.

மிகையீல் கோர்பச்சேவ், வரலாற்றின் போக்கை மாற்றியவர் என்று கூறி ஐ.நா. தலைமைச் செயலாளர் அண்டோனியா குட்டரஸ் அஞ்சலி செலுத்தியுள்ளார். மிகையீல் கோர்பச்சேவ் இரக்கம் மிகுந்த அரசியல் தலைவர். அமைதிக்காக சோர்வின்றி பாடுபட்ட, பலமுனை உறவுகளுக்கு ஆதரவான, மிக உயர்ந்த தலைவர் ஒருவரை உலகம் இழந்து விட்டது என்று அவர் தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

கோர்பச்சேவ் மறைவுக்கு ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார் என்று ரஷ்ய செய்தி முகமையான இன்டர் பேக்சிடம் தெரிவித்துள்ளார் அவரது செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ்.

“நம்பகமான, மரியாதைக்குரிய தலைவர், என்று அவரை ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயன் புகழ்ந்து உரைத்துள்ளார்.

கோர்பச்சேவின் துணிச்சலையும், நம்பகத் தன்மையையும் எப்போதும் வியந்து வந்ததாகவும், சோவியத் சமூகத்தை அவர் திறந்துவிட்டது, புடினின்



ஆக்கிரமிப்புக் காலத்தில் எடுத்துக்காட்டாக உள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் பல தலைவர்கள் அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

நீண்ட காலம் நீடித்த, தீவிர நோய் ஒன்றின் காரணமாக அவர் இறந்துவிட்டார் என மாஸ்கோவில் அவர் சேர்க்கப்பட்டிருந்த மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே அவரது உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் சேருவதும், வீட்டுக்குத் திரும்புவதுமாக அவர் இருந்தார். சிறுநீரகக் கோளாறு ஒன்றுக்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என கடந்த ஜூன் மாதம் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், அவரது மறைவுக்கான காரணம் தற்போது விவரிக்கப்படவில்லை.

வரலாறு

1985ம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அதன் வழியாக நாட்டின் தலைவராகவும் ஆனவர் கோர்பச்சேவ்.

அப்போது அவரது வயது 54. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுவான பொலிட் பீரோவின் இளம் உறுப்பினர் அவர். அவருக்கு முன்பு அந்தப் பொறுப்பில் சுமார் ஓராண்டு இருந்த கோன்ஸ்டான்டின் செர்னென்கோ தமது 73 ஆவது வயதில் இறந்த நிலையில் இளம் தலைவரான இவர் பதவிக்கு வந்தார்.

கடுமையான கட்டுப்பாடுகளால் மூச்சுத் திணறிக்கொண்டிருந்த சோவியத் ஒன்றியத்தில் மக்கள் அரசாங்கத்தை விமர்சிக்க அனுமதிக்கும் ‘கிளாஸ்னாஸ்ட்’ என்ற திட்டத்தை அறிமுகம் செய்தார். இந்த சொல்லுக்கு ’வெளிப்படையாக’ என்று பொருள். அதே நேரம் சோவியத் ஒன்றியத்தின் பல பகுதிகளில் தேசியவாத உணர்ச்சியைக் கிளறினார். இதன் பலனாக ஒன்றியம் சிதறியது.

அமெரிக்காவுடன் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு உலக அமைதிக்கு பங்களித்தார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் சிலருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தபோது சோவியத் ஒன்றியத்தின் சார்பில் அவர் தலையீடு செய்யவில்லை.

**(நன்றி: பி.பி.சி. தமிழ்)**

# இலங்கையின் நெருக்கடிக்குக் காரணமானவர்கள் தற்போது மொட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்!

## இப்படிப் பிதற்றுகிறார் அதன் செயலாளர் சாகர




இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்குக் காரணமானவர்கள் மொட்டுக் கட்சியை விட்டு விலகியுள்ளனர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் செய்தியாளர் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

இதில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் குறித்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் தற்போதைய நெருக்கடி மற்றும் அதனையொட்டி எழுந்த இளைஞர்களின் போராட்டம் என்பவற்றுக்குக் காரணமாக இருந்தவர்கள் இப்போது மொட்டுக் கட்சியை விட்டும் விலகிச் சென்றுவிட்டார்கள்.

இந்த நிலையில் ஜனாதிபதி தொடர்ந்தும் சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பான நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொள்வதைப் போன்றே உடனடியாக அரசியல் ஸ்திர நிலையையும் ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமான விடயமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# இரத்மலானை ரயில் நிலையத்தை திருடர்களிடமிருந்து காக்க ஏற்பாடு

## அமைச்சர் பந்துல நடவடிக்கை



இரத்மலானையில் அமைந்துள்ள தொடருந்து தொழிற்சாலையை திருடர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கொண்டுள்ளார்.

போக்குவரத்து மற்றும் வெகுசனத் தொடர்பாடல் அமைச்சர் பந்துல குணவர்த்தன இரத்மலானையில் அமைந்துள்ள ரயில் தொழிற்சாலைக்கு விஜயம் செய்த போது அதற்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கையின் மிகப் பெரும் அரச தொழிற்சாலையான ரயில் தொழிற்சாலையில் ரயில்களின் திருத்தப் பணிகள், எஞ்சின் பராமரிப்புப் பணிகள், ரயில் பெட்டிகள் தயாரிப்பு, உதிரிப்பாகங்கள் தயாரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் உள்ளிட்ட ஏராளம் பணிகள் நடைபெறுகின்றன.

இந்தத் தொழிற்சாலை பெரும் நிலப்பரப்பில் அமைந்துள்ளதன் காரணமாக அங்குள்ள பாதுகாவலர்களால் மொத்த தொழிற்சாலைக்கும் உரிய முறையில் பாதுகாப்பு வழங்க முடியாதுள்ளது.

இதன் காரணமாகத் திருடர்கள் மற்றும் போதைக்கு அடிமையானோர் இந்தத் தொழிற்சாலையின் உதிரிப்பாகங்களைத் திருடிச் சென்று குறைந்த விலைக்கு விற்பனை செய்து அரசாங்கத்துக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்துகின்றனர்.

அவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொலிஸாரின் ரோந்து மற்றும் காவல் பணிகளை அதிகரிக்கவும், விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கைச் சிறார்களின் போசாக்குக் குறைபாடு அரசு உடனடியாக தீர்வுகளை வழங்கவேண்டும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

இலங்கையில் சிறார்களின் போசாக்கு குறைபாடு தொடர்பில் யுனிசெவ்வின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் விடுத்துள்ள பாரதூரமான கருத்து தொடர்பில் அரசாங்கம் உடனடியாக தீர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் சிறார்களின் போசாக்கின்மை தொடர்பில் தற்போது பாரிய நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மௌனம் காப்பது ஆச்சரியமளிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு 30 ரூபா கிடைத்தது. இன்று முட்டையின் விலை 60 ரூபாவாக உயர்ந்துள்ளதால் சத்துணவு விநியோகஸ்தர்கள் பாடசாலைகளுக்கு உணவு வழங்காமல் தவிக்கின்றனர் என்றும் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஒவ்வொரு பொருளின் விலையும் மூன்று மடங்காக உயர்ந்து, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாத நிலை உள்ளது. இந்தப் பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுகள்



தொடர்பில் நாட்டுக்கு விரைவில் விளக்கமளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் உள்ள குழந்தைகள் 'பசியுடன் படுக்கைக்குச் செல்கிறார்கள்' என்று ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் ஒருபோதும் இலங்கையாக மாறாதாம்!

## அதன் பிரதமர் ஷேக் ஹசீனா கருத்து



தமது நாடு ஒருபோதும் இலங்கையாக மாறாது என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

தேசத் தந்தை கே் முஜிபுர் ரஹ்மானின் 47 ஆவது தியாக நினைவு தினம் கடந்த செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

பங்களாதேஷ் ஒருபோதும் இலங்கையாக மாறாது. அத்துடன் ஒருபோதும் இலங்கை போன்ற பொருளாதார சூழ்நிலையில் மூழ்காது.

அதற்கு பதிலாக நமது நாடு அனைத்து உலகளாவிய சவால்களையும் கடந்து தொடர்ந்து முன்னேறும்.

ஏற்கனவே எதிர்கட்சியின் ஆட்சியில் பங்களாதேஷ் இலங்கை போன்ற சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் எமது கட்சி அந்த நிலைமையை மாற்றியுள்ளது. – எனக் கூறியுள்ளார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு என மோசடிகள் சிக்கவேண்டாம் என பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 31

சுற்றுலா விசாவில் மலேசியா சென்று அந்நாட்டில் வேலை விசாவாக மாற்ற முடியும் எனக் கூறி மோசடி நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபடும் ஆட்கடத்தல் கும்பலை கைது செய்ய குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவ்வாறான எந்தவொரு விசா நடைமுறையும் இல்லையெனவும், இவ்வாறான மோசடியாளர்களிடம் சிக்கவேண்டாம் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாடு செல்வதற்கு முன்னர் தமது வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பங்கள் இனி இணையம் ஊடாக அனுப்பவேண்டும்!

## வெளியாகியுள்ள முக்கிய அறிவிப்பு

2021ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை இணையத்தின் ஊடாக அனுப்ப வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒன்லைன் முறையின் மூலம் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை உரிய முறையில் கவனத்தில் கொள்ள வேண்டும். – எனக் கூறியுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி மேலும் 2021 ஆம் அண்டு உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, 42 ஆயிரத்து 519 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்து 35 மாணவர்கள் மருத்துவ பீடங்களுக்கும், 2 ஆயிரத்து 238 மாணவர்கள் பொறியியல் பீடங்களுக்கும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# காணாமலாக்கப்பட்டோருக்காக கிழக்கில் போராட்டங்கள்

## திருகோணமலை நகரத்தில்!



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு திருகோணமலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக காணாமல்ஆக்கப்பட்டவர்களது உறவுகள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர், பேரணியாகச் சென்று கத்தோலிக்க மதகுரு டன்ஸ்டன் பிரட்ரிகிடம் மஹஜர் ஒன்றி னையும் கைய ளித்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சங்கத்தின் தலைவி செபஸ்டியான் தேவி, நாளுக்கு நாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மாற்றமடைந்து வரும் இந்த நாட்டில் யாரிடம் சென்று தமது குறை குற்றங்களை முறையிடுவது என கேள்வி எழுப்பினார். இலங்கை அரசாங்கம் தீர்வைத் தர மறுக்கிறது. எனவே சர்வதேச நீதி விசாரனை தேவை. எங்கள் உறவுகள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டு 14 வருடங்கள் தவிக்கின்றோம் நீதிநியாயத்தை நிலை நாட்டத் தடுமாறும் அரசாங்கமே நீதியை தா எனவும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு நகரில்!

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று முன்தினம் அதனை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியப் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட் டத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வட கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு காந்தி பூங்காவிலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் கலந்து கொண்ட கவனவீர்ப்புப் பேரணியானது ஆரம்பமாகி மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையம் ஊடாக தந்தை செல்வா சதுக்கம் வரையில் சென்றதுடன் அங்கு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப் பட்டது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



## கிழக்கு தமிழர்களின் சம காலமும் எதிர்காலமும் பற்றிக் கலந்தாய்வு





மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிழக்கு தமிழரின் சம காலமும் எதிர்காலமும் என்ற தொனிப் பொருளிலான கருத்தாடல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை 28.ஆம் திகதி செங்கலடி செல்லம் பிறிமியர் மண்டபத்தில் தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கருத்தாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், ச.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரிய நேத்திரன், ஞா.சிறிநேசன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பொது அமைப்பினர், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். குறிப்பாகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தவிர்ந்த அனைத்து தமிழ், சிங்கள் தேசியக் கட்சிகளின் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியலாளர்கள் இக்கருத் தாடலில் கலந்துகொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

இதன்போது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும், அரசியல் ரீதியான பிரச்சினைகள் தொடர் பிலும் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் இன விகிதாசாரத்தினை அதிகரிப்பதற்கான பிள்ளைபெறு வீதத்தை அதிகரிப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கமைவாக வாழ்வாதாரம் குறைந்த குடும்பங்களில் குழந்தைகளை வளர்ப் பதற்கான பொருளாதார நிலைமைகளை ஊக்குவிப்பதற்காக புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடன் அதற்கான ஒரு நிதியத்தினை ஆரம்பிப்பது தொடர்பிலும் முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து புத்திஜீவிகள், அரசியற் பிரமுகர்களின் கருத்துகள் பகிரப்பட்டன.

இக்கருத்தாடல் நிகழ்வுகளை எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மொழி உரிமைகள் தொடர்பில் அம்பாறை மாவட்ட செயலமர்வு

மனித அபிவிருத்தி தாபனம், தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்திட்டத்தின் ஆதரவுடன், அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திய மொழி உரிமைகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத்திட்டம் சம்பந்தமான மாவட்ட செயலமர்வு மற்றும் திட்ட வளர்ச்சி பற்றிய பின்நோக்கு நிகழ்வு நேற்று முன்தினம் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேத நாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், இலங்கை மனிதர் உரிமைகள் ஆணைக்குழுவின்கல்முனைபிராந்திய இணைப்பாளர் ஏசிஏ.அசீஸ், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், அம்பாறை மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர் பிரதீஸ்கரன் பிரான்சிஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன்போது, திட்ட வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இத்திட்டத்திற்கு உதவியோர் பதக்கம், நினைவு பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் தாபனத்தின் வட கிழக்கு மாகாண பணிப்பாளர் பொன்னையா சிறிகாந்த், அம்பாறை உதவி இணைப்பாளர் எம்.ஐ. ரியால் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.





## காத்தான்குடியில் கலைப் பெருவிழா





காரிகை கலை இலக்கியக் கழகத்தின் இவ்வருட இஸ்லாமிய முஹர்ரம் புது வருடக் கலைப் பெருவிழா காத் தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைப்பின் ஸ்தாபகத் தலைவி இலக்கியச் சுடர் ஜாஹிதா ஜலால்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆறு பாடசாலை அதிபர்கள் 'காரிகை திலகம்' பட்டம் சூட்டப்பட்டு, நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கலை, இலக்கியத் துறைக்கு ஆற்றிய பெரும் பங்களிப்பினைப் பாராட்டி 12 கலைஞர் களுக்கு 'கலைக் காரிகை' பட்டம் இதன் போது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இங்கு கவியரங்கு, தகறா, கோலாட்டம், நாட்டார் பாடல் என சிறார்களின் கண்கவர் கலை நிகழ்வுகளும், இஸ்லாமிய கீதம், நாட்டார் பாடல், கோலாட்டம், பெண் கவிதாயி னிகளின் கவிதையரங்கு என்பன காரிகை கலை இலக்கியக் கழக அங்கத்த வர்களாலும் அரங்கேற் றப்பட்டன.

காரிகை கலை இலக்கியக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் ரீ. குணபாலா, மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ. மலர்ச் செல்வன், காத்தான்குடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மௌலவி. எம்.ஐ.எம். ஜவாஹிர் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் வீ.சிந்து உஷா ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்குபற்றினர். சிரேஷ்ட இலக்கிய வாதிகளான கவிமணி புகாரி பலாஹி, மௌலவி பௌஸ் (சர்கி), மௌலவி மன்சூர், காரிகை கலை இலக்கியக் கழகத்தின் செயலாளர் ஹாஜரா கலீலூர் றகுமான் மற்றும் பொருளாளர் முப்லிஹா பிர்தௌஸ் உள்ளிட்ட கழகத்தின் உறுப்பினர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஜே.வி.பியின் தவறுகள்

### அங்கம் - 109

தாங்கள் தங்களது பறிப்புக்களால் பெற்றுக் கொண்ட ஆயுதங்களை தேசாபிமானம் மிகுந்தவர்கள் என ஜே.வி.பி. அங்கத்தினர் கணித்தவர்களுக்கு வழங்கினர். அவர்களின் பலர் இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களாக இருந்தனரே தவிர, வேறு கொள்கைப் பாடுகளில் ஜே.வி.பினரோடு இணைந்தவர்கள் அல்லர்.

அப்படியான வளர்ச்சித் தன்மைகளைக் கோடி காட்டித்தான் 1984இல் லயனல் போபகே ஜே.வி.பி. இயக்கத்தில் இருந்து விலகியிருந்தார்.

மக்கள் ஆதரவு வேண்டும் என்பதற்காகக் கட்டுப்பாடின்றி, உரிய தேர்வு முறைகள் அற்று, அங்கத்தினர்களைச் சேர்ப்பதால் அவர்கள் கொள்கை அடிப்படையில் ஒன்று கூட மாட்டார்கள், தன்னிச்சையாக செயற்படுகின்றமையால் அமைப்பையே வீழ்த்தி விடுவார்கள் என்று லயனல் போபகே முற்கூட்டியே கணிப்புச் சொன்னார். அது இங்கும் நடந்தது.

இப்படியாகத் தரப்பட்ட ஆயுதங்கள் மக்களிடையே இருந்த தங்களின் தனிப்பட்ட பிரத்தியேக குரோதங்களைத் தீர்த்துக் கொள்ள பாவிக்கப்பட்டன. அத்தகைய சம்பவங்கள் கட்டுக்கடங்காமல் பெருகின. அவற்றில் பலவற்றில் ஜே.வி.பிக்கே சம்பந்தம் இருக்கவில்லை. ஆனால் அவர்களுடைய கணக்கிலேயே அவைஎல்லாம்பதியப்பட்டன. அவர்களது அழிவையும் இவ்வாறான சம்பவங்களே தீர்மானித்தன.

மக்கள் எழுச்சியாலும் கட்டமைக்கப்படாத வன்முறையின் பயத்தாலும் அரசு பணிந்து விடும் என்ற குறுகிய நோக்குடைய எண்ணங்களில் ஜே.வி.பி. இயங்கியது. அவர்களுடைய அங்கத்தவர்கள் உரிய முறைகளில் பயிற்சியளிக்கப்படாதமையம், அவர்களது கொலைப் பயிற்சிகளுக்காகத் துரோகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விடயத்தில் அப்பாவிப் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டமையும், கொலை செய்யப்பட்ட முறைகளும், காரணங்களும், பொதுமக்கள் மத்தியில் விரோதத்தை வளர்த்தனர்.



ஜே.ஆர்.

ஜே.வி.பி. இந்திய எதிர்ப்பு என்பதால், தென்பகுதிகளில் மக்கள் இந்தியாவில் உற்பத்தியாகும் பம்பாய் வெங்காயம், மைசூர் பருப்பு போன்ற பொருள்களை புறக்கணிக்க வேண்டும் என ஜே.வி.பி. உத்தரவு போட்டிருந்தது. அதை மீறி யாரும் வாங்கிக் கொண்டு போனாலும், அல்லது அதனை விற்பனை செய்தாலும் அவர்கள் தீர்த்து கட்டப்பட்டார்கள்.

மக்களும் இவர்களை விடுதலைப் புலிகள் போல் இந்திய இராணுவத்துடன் நேரட்டியாகப் போராட திராணியற்றவர்கள், தென்பகுதியில் அப்பாவிகளிடம் தங்களது வீராப்பையும் வீரத்தையும் காட்டுகிறார்கள் என வைத்தார்கள்.

இவற்றால் அவர்கள் (ஜே.வி.பியினர்) தாங்கள் இந்திய இராணுவத்தைத் தாக்கும் பயில்வான்களாக வேண்டும் என நினைத்தார்கள். அதனால், 'தேசப் பிரமி ஜனதா வியாபாரய'என்றஅமைப்பை உருவாக்கி, அதன் பொறுப்பை அவர்களின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் குமார் குணரத்தினமிடமும் அவரது நண்பர்களிடமும் கையளித்து. இந்திய இராணுவததுடன் நேரடியான தாக்குதல்களில் ஈடுபடும் வேளைகளில் ஜே.ஆருக்கும் தலையிடி தரக்கூடிய சம்பவங்களும் தேவை எனப் பணித்தார்கள்.



லயனல் போபகே

குமார் குணரத்தினத்திற்கு விடுதலைக் குழுக்களிடையே விடுதலைப் புலிகள் உட்பட மார்க்சிய தத்துவங்களின் அடிப்படைகளில் முழு தேசத்திற்குமான புரட்சி ஒன்றை நோக்கிய உறவுகள் இருந்தன. அவை முக்கியமாக திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் சீரான நிலைகளில் இருந்து வந்தன. ஆகவே குமார் குணரத்தினம் சாதுரியமாக இந்தியப் படைகளுக்குச் சார்பாக ஒத்துழைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட்போன்றகுழுக்களின் அங்கத்தினர்களைச் சிங்களம் பேசிய தங்களுடைய போராளிகளோடு சேர்த்து திருகோணமலையிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களில் இருந்த சிங்கள குடியிருப்புகளையும் மக்களையும் தாக்கினர். மக்கள் இந்தியபடைகளின்பங்காளிகள் தங்களை தாக்கித் துரத்துகிறார்கள் என வெளியேற, அவர்களுக்கு பஸ்களும் தட்டி வான்களும் ஒழுங்குப்படுத்தி 'இன்னும் சில குடும்பங்கள் தமிழரால் துரத்தப்பட்டுதென்பகுதிக்குவருகிறார்கள்' என்ற பதாகைளுடன் அனுப்பி வைத்தார்கள். சில குடும்பங்களைத் தாக்கியவர்களில் சிங்களம் பேசியவர்களும் இருந்தமையால் அவர்களைத் துரத்தியது ஜே.வி.பியா என்ற சந்தேகங்களும் இருந்தன.

தருணங்களுக்காக எல்லா தரப்பினரும் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருந்த வேளை அது. அதில் புலனாய்வு, உளவுத் துறை வித்தகர்கள் தங்களது மெருகை ஏற்றி தங்களுக்குத் தேவையான – பிரயோசனமான – முறைகளில் தகவல்களை அனுப்பி, புகுந்து விளையாடினார்கள்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரோடு இருந்த அரசின் அமைச்சர்கள், ஜே.வி.பியினரால்தான் மக்கள் குடியிருப்புகள் கலைக்கப்படுகின்றன என செய்திகளுக்கு ஆதாரங்கள் எடுத்து, கடைசியில் இந்த ஒப்பந்தத்தால் ஜே.வி.பியினதும் மக்களினதும் பகைமையைத் தேடியது தான் மிச்சம் என்று நின்றார்கள்.

ஜே.ஆரோ தனக்கு வந்த புலனாய்வுத் தகவல்களில் இவை இந்தியப்படைகளின் ஆதரவோடு தமிழ் குழுக்களால் நடத்தப் படுகின்றன, அத்தகைய வன்முறைகள் நடைபெறாமல் இருக்க இந்தியா உத்தர வாதம் தர வேண்டுமென அழுத்தங்கள் தந்தமையுடன், வன்முறைகளைக் கட்டுப் படுத்த இந்தியா தவறுகிறது எனக் குற்றச்சாட்டினார்.



குமார் குணரத்தினம்



நிரூபம் சென்

இந்திய இராணுவ சிப்பாய்கள் 14 பேர் குமார் குணரத்தினத்தின் 'தேச பிரேமி ஜனதா வியாபாரய' குழுவினால் தம்பலகாமத்தில் கொல்லப்பட்டதும், பிரதித் தூதுவர் நிரூபம் சென் இந்தியாவுக்கு மேலதிக திட்டங்களுடன் சென்றார். அவற்றின் விவரங்களைத் தொடர்ந்து பார்க்கலாம்.

(வளரும்)

# எரிபொருள் விநியோகக் குளறுபடிகள் அனைத்தும் நிவர்த்திக்கப்பட்டுள்ளன!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அதிகளவிலான கையிருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில்

விநியோக குறைபாடுகள் சரி செய்யப்பட்டு, கடந்த 4 நாள்களில் அதிக பங்குகள் அனுப்பப்பட்டுள்ளன. சி.பி.எஸ்.ரி.எல். தினசரி 4000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3000 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்யப்படவுள்ள நிலையில், பஸ்கள் மற்றும் பாடசாலை சேவைகளுக்கான தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 35 ஆயிரம் மெற்றிக் தொன் 92 ஒக்டைன் பெற்றோல் நேற்று நாட்டை வந்தடைந்தது எனவும் அமைச்சர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# மகசின் சிறைக் கைதிகள் இருவர் உயர்தர பரீட்சையில் சித்தியடைவு!



உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மகசீன் சிறைச்சாலையின் இரண்டு கைதிகள் சித்தியடைந்துள்ளனர் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மகசீன் சிறைச்சாலையின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் மகசீன் சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் உயர்தரப் பரீட்சையில் தோற்றினர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பல்வேறு குற்றச்சாட்டின் பேரில் சிறைக்கு அனுப்பப்படும் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை நல்ல குடிமக்களாக மாற்றும் முக்கிய நோக்கத்துடன் சிறைச்சாலை திணைக்களத்தின் பூரண ஈடுபாட்டுடன் கைதிகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றிய முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினரான கிளிநொச்சியை சேர்ந்த 38 வயது கைதி 2 ஏ 1 எஸ் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

அத்துடன், கேகாலையைச் சேர்ந்த 46 வயதான கைதி, 3 எஸ் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

# இலங்கையில் கால்பதிக்கும் அதானி குழுமம்

## உலகில் 3 ஆவது செல்வந்தராகத் தரமுயர்வு!



உலகின் மூன்றாவது செல்வந்தராக கௌதம் அதானி உருவாகியுள்ளார் என புளூம்பேர்க் அறிவித்துள்ளது.

ஆசியாவின் மிகப்பெரிய செல்வந்தராக இருக்கும் அதானியின் மதிப்பு தற்போது சுமார் 1370 கோடி டொலராக அதிகரித்திருப்பதால் அவர் பிரான்ஸின் செல்வந்தரான பேனாட் ஆனோல்டை பின்னுக்குத்தள்ளி மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதி உட்பட்ட பகுதிகளில் சக்தி வளத்துறையில் கால்பதித்துள்ள அதானி குழுமத்தின் சொந்தக்காரராக அதானி, இப்போது உலகின் முதலாவது செல்வந்தரான ரெஸ்லாவின் நிறைவேற்றுப்பணிப்பாளர் எலோன் மஸ்க், இரண்டாவது செல்வந்தரான அமேசான் நிறுவன நிறுவுநர் ஜெஃப் பெசோஸ் மற்றும் ஆகியோருக்கு அடுத்து மூன்றாவது செல்வந்தராக உருவாகியுள்ளார்.

இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான அதானி குழுமம் துறைமுகங்கள் சூரிய ஆற்றல் மற்றும் நிலக்கரி உட்பட்ட தொழில்துறைகளில் கோலோச்சிக்கொள்கிறது. அதானி குழுமத்தின் செல்வம் கொரோனா தொற்றுக்காலத்தின் போதும் உயர்ந்தது.

குறிப்பாக நிலக்கரி பயன்பாடு சார்ந்த தொழிற்துறையில் இன்னும் செல்வத்தை திரட்டிய அவர் ஆசியப் பிராந்தியத்தின் முதலாவது செல்வந்தராக இருந்த முகேஷ் அம்பானியை கடந்த பெப்ரவரி மாதத்தில் பின்னுக்குத் தள்ளி, முதலாவது இடத்துக்கு உயர்ந்தார்.

கடந்த வாரம், இந்தியாவின் செல்வாக்கு மிக்க தொலைக்காட்சி ஒன்றை கையகப் படுத்துவதற்கான முயற்சிகளின் மூலம் அலைகளை உருவாக்கிய நிலையில், அதானி இப்போது உலகின் மூன்றாவது செல்வந்தராகப் பதிவாகியுள்ளார்.

# தமது இருப்பைத் தக்கவைக்கவே மொட்டை ஜனாதிபதி பாவிக்கறார்!

## ஹர்ஷ டி சில்வா சாடல்



தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே மொட்டு கட்சி ஜனாதிபதியை பயன்படுத்துகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று (புதன் கிழமை) பங்கேற்று உரை யாற்றிய போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத் திவந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போது அதே சட்டத்தைக் கையில் எடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், போராட்டக்காரர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தப் படுகின்றது எனவும், இதன் தாக்கம் ஜெனிவா தொடரில் எதிரொலிக்கும் எனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

காகத்தின் கூட்டில்தான் குயில் முட்டையிடும். சிறிதாக இருக்கும்போது, குயிலும் காகம்போல இருக்கும். வளர, வளரதான் பிரச்சினை ஆரம்பமாகும். குயில் விரட்டியடிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

மொட்டு கட்சி ஆட்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள இடைக்கால வரவு செலவு திட்டமும் காகத்தின் கூட்டில் குயில் முட்டை கதை போல்தான். பாரிய ஆபத்து காத்திருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே மொட்டு கட்சி ஜனாதிபதியை பயன்படுத்துகின்றது எனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித் துள்ளார்.

இதன்காரணமாகவே அவரின் சில திட்டங்களுக்கும் இணக்கம் தெரிவித்துள்ளது என குறிப்பிட்ட அவர், ஆனால் தருணம்வரும்போது வேலையைக் காட்டுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையில் பாலியல் இலஞ்சம் குறித்த நிகழ்ச்சி சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலைய ஏற்பாட்டில்!

ஆசிய மன்றத்தின் (The Asia Foundation) உதவியுடன் இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றைச் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice- CEJ) நடைமுறைப் படுத்துகின்றது.

அரசாங்க உத்தியோகத்தர் போன்ற (உ-ம்: கிராம சேவகர், பொலிஸ் உத்தியோகத்தர், சமுர்த்தி நலன்புரி உத்தியோகத்தர், நீதிபதி போன்ற) அதிகாரத்தில் உள்ள ஒருவர், உரித்தான சேவைகள் அல்லது பயன்களை வழங்குவதற்கு பாலியல் செயற்பாடு முன்னெடுக்கப்படல் வேண்டும் என நிர்ப் பந்திப்பது அல்லது கட்டாயப் படுத்துவது பாலியல் இலஞ்சம் எனப்படும்.

உலகளாவிய ரீதியில், பயம், புரிந்துணர்வின்மை மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஆய்வு இன்மையால் அறிக்கைப்படுத்தப்படாத ஒன்றாகப் பாலியல் இலஞ்சம் காணப் படுகின்றது.

இலங்கையில், அரச சேவைகளை அணுகும் போது தனிநபர்கள், குறிப்பாகப் பெண்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுப் பால்நிலை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (LGBTQI) பாலியல் இலஞ்சத்தை எதிர்கொள்கின்றனர் என CEJ இனால் நிறைவு செய்யப்பட்ட மற்றும் தற்போது முன்னெடுக்கப்படும் ஆய்வு காட்டு கின்றது. அத்தகைய சேவைகள் மறுக்கப்படுதல் அவர்களது சமூக, பொருளாதார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் மீறல் களாகும்.

சுகாதார மற்றும் நீதித் துறைகள் தொடர்பான விசேட அக்கறையுடன் பாலியல் இலஞ்சம் நிகழ்தல் தொடர்பான ஆய்வுக் கற்கை என்பதே இந்தச் செயல் திட்டத்தின் பிரதான அம்சமாகும்.

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத் தவர்கள் மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களுடன் பிரதான தகவல் வழங்குநர் நேர்காணல்களைப் பயன் படுத்தி, உள்ளக சூழ்நிலையில் பாலியல் இலஞ்சத்துக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு CEJ எதிர்பார்க்கின்றது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) உத்தியோகத்தர்களுக்கான பால்நிலை மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பான பல்வேறு திறன்களைக் கட்டியெழுப்புதல் தொடர்பிலான செயலமர்வுகளை முன்னெடுத்துள்ளது.

அண்மையில், ஊழலின் ஏற்றுக் கொள்ள முடியாத மற்றும் அருவெறுக்கத்தக்க வடிவிலான பாலியல் இலஞ்சம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு முழுமையான ஊடகப் பிரசாரம் ஒன்றை CEJ ஆரம்பித்தது.

ஊழலற்ற சேவைகளை ஊக்குவித்தல் மற்றும் அரச துறையில் பாலியல் இலஞ்சத்துக்கான சகிப்பின்மையை அமுலாக்கல் மூலம் பாலியல் இலஞ்சத்தை முடிவு செய்வதில் இலங்கையில் மிகவும் பாரிய தொழில்வலுவான அரச துறை தலைமை வகிக்கமுடியும் என CEJ உறுதியாக நம்புகின்றது.

அந்தவகையில், எமது முழுமையான அணுகுமுறையின் ஓர் அங்கமாக, ஐக்கிய நாடுகள் பொதுச்சேவைகள் தினத்தில் இணையதளம் மூலமான பிரசாரம் ஒன்றை CEJ ஆரம்பித்தது.

பாலியல் இலஞ்சம் தொடர்பாக அறிந்துகொள்வதற்கும் பாதுகாப்பான மற்றும் நியாயமான சமூகங்களை உருவாக்குவதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் எமது சமூக ஊடகங்களில் [Webpage (https://cejsrilanka.org/sexual-bribery/), Facebook English (@TheOpenSecret.Eng), Facebook Sinhala (@vivurtharahasa), Facebook Tamil (@பிரபல இரகசியம்), Twitter (@CEJ_SriLanka), Instagram (@cej_srilanka)] இந்தப் பிரச்சாரத்தைத் தொடருமாறு நாம் உங்களை அழைக்கின்றோம். தொலைக்காட்சி, வானொலி, மற்றும் பத்திரிகை ஊடாக அடுத்துவரும் வாரங்களில் வெளியிடப்படும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2022இல் வெளியிடப்பெற்றது.